**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

## மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2009ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30ம் நாள் புதன் கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் : " செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின் "**

**பொருள் :** ஒருவன் அறிய வேண்டுவனவற்றை அறிந்து, ஐம்புலன்களையும் தக்க வழியில் அடக்கி ஒழுகினால், அவ்வடக்கம் சான்றோரால் அறியப்பட்டு. மேன்மையை அவனுக்குக் கொடுக்கும்

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று. இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) சி.டபிள்யு.3/1436/07**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 14.12.2009-ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.835**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) ந.பொ.1 (ம.வ.3) /38554/08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் விபத்துக்கள்ளாவதை தவிர்க்கும்பொருட்டு நகரிலுள்ள முக்கிய சாலைகளின் மையத்தில் தடுப்புச்சுவர் கட்ட திட்டமிடப்பட்டது. கோரிப்பாளையம், சிம்மக்கல், தெற்குவாசல், பாலம் ஸ்டேசன் ரோடு, பனகல் ரோடு, கே.கே.நகர், அண்ணாநகர், எஸ்.எஸ்.காலனி மற்றும் பைபாஸ் சாலை போன்ற முக்கிய
சாலைகளின் நடுவே நவீன முறையில் பசுமையுடன் கூடிய வகையில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு உத்தேச திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.00 கோடிக்கு மேலாகும் என கண்டறியப்பட்டது. தற்போது மாநகராட்சியில் உள்ள நிதி நிலைமையில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்வது சாத்தியமாகாது. எனவே தனியார் நிறுவன பங்களிப்பு மூலம் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கை தொடர்ந்து விளம்பர நிறுவனங்கள் மூலம் சாலையின் மையத்தில் தடுப்புச்சுவர் கட்டும் பணியை மேற்கொள்ள நிர்வாக அளவில் முடிவுசெய்யப்பட்டது. வான்டேஜ் அட்வர்டைஸிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் மாநகராட்சியில் சமர்ப்பித்த 08.07.2008–ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட முக்கிய சாலையின் நடுவே BOT முறையில் சிமெண்ட கற்களிலான தடுப்புச்சுவர் அமைத்து ஷ தடுப்புச் சுவர்களின் மத்தியில் புல்வெளிகள் உருவாக்கி பசுமையான வண்ணத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு பத்து மீட்டர் இடைவெளியில் மின்விளக்கு வசதிகளுடன் கூடிய 2.5" X 4.0" என்ற அளவில் விளம்பர பலகைகள் அமைத்து கொள்வதற்கும் மேலும் ஷ சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மைய தடுப்புச் சுவர்களில் ஒவ்வொரு 30 மீட்டர் இடைவெளியிலும் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு மின்கம்பங்கள் அமைத்து அதன் இருபக்கமும் அலங்கார விளக்குகள் அமைப்பதற்கும் அதற்கு ஈடாக மதுரை நகரிலுள்ள 10 பாலங்களில் அமைந்துள்ள தெருவிளக்கு மின்கம்பங்களில் 1.83 மீ X 1.00 மீ என்ற அளவில் இருபக்கமும் தெரியக்கூடிய வகையில் விளம்பர பலகைகள் அமைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கும் படியும் இவ்வனுமதி தொடர்பாக ஆக்கிரமிப்பு வரி மற்றும் விளம்பர வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து ஷ பணி ஆரம்பித்து முடிவுற்ற நாளிலிருந்து 15 வருடங்களுக்கு பராமரித்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கும் படியும் கோரப்பட்டது

| வ.எண். | சாலைகளின் பெயர் | உத்தேசிக்கப்பட்ட நீளம் (மீட்டரில்) |
|---|---|---|
| 1. | கே.கே.நகர் ஆர்ச் முதல் ஆவின் சந்திப்பு வரை | 1100.00 |
| 2. | ஆவின் சந்திப்பு முதல் குருவிக்காரன் சாலை பாலம் வரை | 650.00 |
| 3. | கோரிப்பாளையம் தேவர் சிலைமுதல் அண்ணா பேருந்து நிலையம் வரை | 1200.00 |

மேற்கண்டவாறு அனுமதி கோரப்பட்டுள்ள சாலைகளின் நடுவே உத்தேச நீளம் 3000 மீட்டருக்கு தடுப்புச்சுவர் அமைத்து பராமரிப்பதற்கும் இரண்டு அலங்கார விளக்குகளுடன் கூடிய புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் 81 எண்ணிக்கையில் அமைப்பதற்காகும் உத்தேச செலவு ரூ.1.00 கோடியை M/s. வான்டேஜ் நிறுவனத்தின் சொந்த செலவிலேயே மேற்கொள்வதை கருத்தில் கொண்டும் மேலும் சாலைகளின் நடுவே தடுப்புச்சுவர் அமைக்கும் பட்சத்தில் வாகனப் போக்குவரத்திற்கு மிகவும் எளிதாக இருக்கும் என்பதையும், வாகன விபத்துக்களினால் ஏற்படும் பொதுமக்களின் உயிர் இழப்பை தடுக்க இயலும் என்பதையும், கருத்தில் கொண்டு BOT (கட்டுதல் - இயக்குதல் - மாற்றுதல் ) (Built – Operate –Transfer- Bot)முறையில் ஷ சாலைகளின் நடுவே M/s. வான்டேஜ் தெரிவித்துள்ள தொழில் நுட்ப அடிப்படையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் கட்டப்படவுள்ள தடுப்புச் சுவரின் ஒவ்வொரு 30மீ இடைவெளியிலும் இரண்டு 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் ISI தரம் வாய்ந்த புதிய தெருவிளக்கு மின்கம்பங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கலாம் என விளம்பர குழுவில் 05.11.08 அன்று தீர்மானிக்கப்பட்ட பிறகு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதலுடன் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட பிறகு வான்டேஜ் நிறுவனத்தினர் பனகல் சாலையில் மைய தடுப்புச் சுவர் கட்டும் பணியை ஆரம்பித்து 75% முடிவுற்ற நிலையில் பொதுமக்கள் மற்றும் அரசு மருத்துவமனை அமைந்துள்ள சாலையின் மையத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பட்சத்தில் அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு செல்லும் பொதுமக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு ஷ பனகல் சாலையில் தடுப்புச் சுவர் கட்டிக் கொள்ள வழங்கப்பட்ட அனுமதி மட்டும் மாநகராட்சியால் ரத்து செய்யப்பட்டு கட்டப்பட்ட தடுப்புச் சுவர் முழுவதும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

இவ்வாறு அனுமதி வழங்கி பணிகள் ஆரம்பித்து முடிவுறும் நிலையில் ரத்து செய்யப்பட்டதால் M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு ரூ.25.00 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்து ஷ நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் கீழ்க்கண்ட சாலையின் மையப்பகுதி மற்றும் பாலத்திலுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களில் விளம்பரம் (Kiosks) செய்து கொள்ள அனுமதி வழங்கும் படி கோரப்பட்டுள்ளது.

1) அண்ணாநகர் P.T.R. பாலம் முதல் மேலூர் சந்திப்பு வரை
2) ராஜா மில் சாலை பாலம் (பாலம் ஸ்டேசன் சாலையை இணைக்கும் பாலம்)

மேலும் கீழ்க்கண்ட சாலைகளின் மையத்தில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் (Octagonal Pdes) அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1) மேலவெளிவீதி, பெரியார் பேருந்து நிலையம் முதல் தலைமை தபால் அலுவலகம் வரை (15 Nos.)
2) வடக்கு வெளி வீதி, சேதுபதி பள்ளி முதல் சிம்மக்கல் மின்வாரிய அலுவலகம் வரை (15 Nos.)

கீழ்க்கண்ட சாலைகளின் ஓரத்தில் (இருபுறமும்) புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1) கீழவெளிவீதி (30 Nos.)
2) தெற்கு வெளி வீதி (60 Nos.)

M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு சாலைகளின் நடுவே மைய தடுப்பு சுவர் கட்டி அலங்கார விளக்குகள் அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பும், தற்போது ஏற்கனவே உள்ள தெருவிளக்கு மின்கம்பங்களிலும் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களிலும் Kisoks விளம்பரம் செய்து கொள்ள அனுமதி வழங்குவதற்கும் மேற்கண்ட பணியினை M/s. வான்டேஜ் நிறுவனத்தினர் தங்களது சொந்த செலவில் மேற்கொள்வதால் விளம்பரம் கட்டணம் செலுத்துவதிலிருந்து 15வருடம் விலக்களிப்பதற்கு முதற்கட்டமாக 5வருடத்திற்கு விலக்களித்து அவருடைய பராமரிப்பு பணி திருப்பதிகரமாக இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து ஒவ்வொரு 5 வருடத்திற்கும் அனுமதியை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்.836</u>
<u>அனுமதி வழங்க வேண்டியதில்லையென மாமன்றம் தீர்மானிக்கிறது.</u>

**<u>3) ம.பொ.3/20264/09</u>**

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு 6ல் உள்ள கே.கே.நகர், எல்.ஐ.ஜி காலனியிலுள்ள மதுரை பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்திற்கு அப்பகுதி பொதுமக்களின் நலனை முன்னிட்டு இலவச குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் படி எல்.ஐ.ஜி.காலனி குடியிருப்போர் பொதுநலச்சங்கத்தினரால் கோரப்பட்டுள்ளது. அன்னாரின் கோரிக்கையை தொடர்ந்து மாநகராட்சி குடிநீர் உபவிதிகளின் படி மேற்கண்ட சமுதாயக்கூடத்திற்கு இலவச குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்.837</u>
<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**<u>4) மநு2/3693/06</u>**

இம்மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் இயங்கும் நாய்கள் கருத்தடை மற்றும் வெறிநோய் தடுப்பு மையத்திற்கு 01.08.09 முதல் 31.07.2010 முடிய நாய்களுக்கு உணவு சப்ளை செய்வது தொடர்பாக டெண்டர் வரவழைக்கப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி (நாய் ஒன்றுக்கு 70/-க்கு உணவுப்பொருள் வழங்க) வழங்கிய "மூனுசாமி மகளிர் சிக்கனம் மற்றும் நாணயச்சங்க சுய உதவிக்குழுவிற்கு" சப்ளை உத்தரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்.838</u>
<u>மீண்டும் பரிசீலனை செய்து வைக்க வேண்டியது.</u>

**5) HF1/25496/09**

மதுரை மாநகராட்சியில் நலவாழ்வு மையம் 3ல் பணிபுரிந்து வரும் திருமதி.S.சாந்தி, பல நோக்கு சுகாதாரப் பணியாளர் அவரது குடும்ப சூழ்நிலையின் பேரில் சாத்தூர் நகராட்சிக்கும், சாத்தூர் நகராட்சியில் பணிபுரியும் திருமதி.K.ஜெரினாபேகம் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் மதுரை மாநகராட்சிக்கும் பரஸ்பர பணிமாறுதல் செய்ய கோரியுள்ள மனுவின் பேரில் அவர்களை பரஸ்பர பணி மாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

1) மேற்கண்ட பரஸ்பர பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கப்படும்.
2) இம்மாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

குறிப்பு :

சாத்தூர் நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்:499, நாள்:30.10.09ல் திருமதி.K.ஜெரினாபேகம், பல நோக்கு சுகாதாரப் பணியாளர் பரஸ்பர பணிமாறுதலில் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

<u>மாமன்ற தீர்மானம் எண்.839</u>
<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**6) மநி1/36130/2008**

மதுரை மாநகராட்சி தணிக்கைத் தடைகளை நீக்கும் ஆய்வாளராக அயற்பணியின் கீழ் திரு.எஸ்.சுப்பிரமணியன் அவர்களை பணியமர்த்தி ஆணை வெளியிட்டுள்ள ந.க.எண்.ப.&நி 1(3) 1413 / 2009 இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித்தணிக்கை, நாள்:29.05.2009ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு: திரு.எஸ்.சுப்பிரமணியன் ஆய்வாளர் 08.06.2009 முற்பகல் முதல் பணியேற்றுள்ளார்.

<u>மாமன்ற தீர்மானம் எண்.840</u>
<u>பதிவு செய்யப்பட்டது.</u>

**7) மவ3/27228/2009**

மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான பசும்பொன் நாளங்காடி பூ மார்க்கெட் சென்ட்ரல் மார்க்கெட் அருகிலுள்ள கட்டிடத்தில் செயல்பட்டு வந்துள்ளது. இப் பூ மார்கெட் 8.11.2006 ம் தேதியிலிருந்து மாட்டுத்தாவணி அருகில் கட்டப்பட்டுள்ள வேளாண்மை வணிக வளாகம் கட்டிடத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மதுரை மலர் வணிக கமிஷன் வியாபாரிகள் நலச்சங்கத் தலைவர் அவர்கள் கடிதத்தில், சென்ட்ரல் மார்கெட் அருகில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வந்த 91 பூ மார்கெட் கடைகளுக்குரிய கேட்புத்தொகை இது காணும் ரத்து செய்யப்படாமல் நாளது தேதி வரை கேட்புத் தொகை பதிவு ஆகி வந்து கொண்டு இருக்கிறது என்பதால், பூ மார்கெட் கடைகளின் உரிமம் ரத்து செய்தும், நவம்பர் 2006 ம் தேதிக்கு பின்னர் உள்ள கேட்புத் தொகையை தவறான கேட்புத் தொகையாக கருதி கேட்புத் தொகையினை நீக்கம் செய்ய கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சென்ட்ரல் பூ மார்கெட் கடைகளின் நீக்கம் செய்ய வேண்டிய கேட்புத் தொகை ரூ.34,06,358-

<u>மாமன்ற தீர்மானம் எண்.841</u>
<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**8) மவ5/22381/2009**

மதுரை மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பாரதியார் வணிக வளாகம் மற்றும் பிற இடங்களில் உள்ள சில கடைகள் மற்றும் 2000-2001 முதல் பூட்டிய நிலையில் உள்ள 50 கடைகளுக்கு வாடகைத்தொகை செலுத்தப்படாமல் இருந்ததால், கடைகளை பூட்டி பொறுப்பு எடுக்கும் படி ஆணையாளர் அவர்களின் உத்தரவின் பேரில் 4.1.2008 ம் தேதியில் பாரதியார் வணிக வளாகம் “D” மற்றும் “F” பிளாக் கடைகள், பிற இடங்களில் உள்ள கடைகளை காவல் துறை பாதுகாப்புடன் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் பூட்டி பொறுப்பு எடுக்கப்பட்டுள்ளது. இக்கடைகளை மராமத்து பணிகள் மேற்கொண்டு ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கடைகள் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பூட்டியுள்ள அனைத்துக் கடைகளும் மறு ஏலம் நடத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : 1) பூட்டிய கடைகளின் விபரம்

| வ. எண் | கடைகளின் விபரம் | கடை எண்கள் |
|---|---|---|
| 1 | பாரதியார் வணிக வளாகம் “D” பிளாக் | 1,13,16,31 |
| 2 | பாரதியார் வணிக வளாகம் “F” பிளாக் | 1,2,3,4,5,6,7,8, 11,12,13,15,16,21,26,27,31,35,36, 37,38,39, 41,42,57,58,59,61, 65,66, |
| 3 | மேலவெளி வீதி | 1,2 |
| 4 | தமிழ் சங்கம் ரோடு | 4 |
| 5 | நவீன சிறப்பங்காடி | 5,10,16,17,18,19,20,21 |
| 6 | கான்சா மேட்டுத் தெரு | 1 |
| 7 | ஜான்சிராணி பூங்கா | 608A |
| 8 | நன்மை தருவார் கோவில் | 15 |
| 9 | இராணி மங்கம்மாள் சத்திரம் | 10 |
| 10 | எழுத்தாணிக்காரத் தெரு | 32 |

2) பூட்டிய கடைகளின் நிலுவைத்தொகையினை பழைய உரிமத்தார்களிடமிருந்து வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாமன்ற தீர்மானம் எண்.842**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி.தேன்மொழி
**மேயர்**
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 22.12.2009**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2009ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30-ம் நாள் புதன்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1) சி.டபிள்யு 3/16628/09</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல் -1 விதி 19(2)-ன்படி 15.12.2009-ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

<u>மாமன்ற தீர்மானம் எண்.843</u>
<u>பதிவு செய்யப்பட்டது.</u>

**<u>2) ம.பொ7/28100/09</u>**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 29-ல் எல்லீஸ் நகர் கருமாரியம்மன் கோயில் அருகில் உள்ள உபயோகமில்லா குடிநீர் மேல்நிலைத் தொட்டி மிகவும் மோசமான நிலையில் இடிந்து விழும் நிலையில் உள்ளது. இதனால் அருகில் உள்ள வீடுகளில் குடியிருப்போர்களிடமிருந்து மனுக்கள் வரப்பட்டதின் பேரிலும் சம்மந்தப்பட்ட வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் பரிசீலனை செய்யப்பட்டதின் பேரிலும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி இடித்து அப்புறப்படுத்த கோரியுள்ளதின் பேரில் குடிநீர் மேல்நிலைத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>குறிப்பு:</u>** குடிநீர் மேல்நிலைத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்த ஆகும் செலவினைத் தொகை ரூ 66,000/- ஆகும்.

<u>மாமன்ற தீர்மானம் எண்.844</u>
<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**<u>3) ம.தி.1/32628/09</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 8ஐ சார்ந்த மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஜெகநாதன் என்பவர் 17.11.2009–ந் தேதிய கடிதத்தில் அண்ணாநகர் PTR பாலம் முதல் அப்போலோ மருத்துவமனை வழியாக மேலூர் சாலையை இணைக்கும் 80 அடி சாலைக்கு "**அறிஞர் அண்ணா சாலை**" என பெயர் சூட்டுமாறும் குருவிக்காரன் சாலை பாலம் முதல் கே.கே.நகர் வழியாக மேலூர் சாலையை இணைக்கும் 80 அடி சாலைக்கு "**டாக்டர் கலைஞர் கருணாநிதி சாலை**" என பெயர் சூட்டுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அன்னாரின் கோரிக்கையினை பரிசீலிக்கப்பட்டு மேற்கண்ட சாலைகளுக்கு பெயர் சூட்டுவது தொடர்பாக அரசின் ஒப்புதலைப் பெற அரசுக்கு கடிதம் அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

<u>மாமன்ற தீர்மானம் எண்.845</u>
<u>அரசுக்கு கடிதம் அனுப்பி வைக்க குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**<u>4) சி.டபிள்யு. 1/ 36230/ 09</u>**

மதுரை மாநகராட்சி 54-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜே.டி.அமுதா கடந்த 24.09.2009, 28.10.2009 மற்றும் 27.11.2009 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 60-ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குட்பட்டு ஷை சட்டம் பிரிவு 57(1) (கே)–ன்படி ஒரு மாமன்ற உறுப்பினர்

கடைசியாக கலந்து கொண்ட கூட்டத்திலிருந்தோ அல்லது பதவியேற்றத்தில் இருந்தோ தொடர்ந்து மூன்று மாதங்கள் கலந்து கொள்ளாமல் இருப்பாராயின், அவர் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழந்தவராக கருதப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4)-ல் கண்டுள்ளவாறு இவ்வாறு தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளாத நிலையில் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழப்பதை மாமன்றத்திற்கு தெரிவித்து, மாமன்றத்தின் முடிவைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4)ல் ஆணையாளர் அறிக்கை அளித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதன் பேரில் மாமன்றம் அவ்வாறான ஒருவர் மீது மீண்டும் மாமன்ற உறுப்பினராக அமர்த்தி தீர்மானிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.846**

**இந்த மாமன்ற உறுப்பினர் உடல்நலம் சரியில்லாமல் இருப்பதாக தெரிவித்திருப்பதால். இம்மாமன்றம் Condone செய்து இவரை தகுதி இழப்பிலிருந்து விலக்களித்து இவர் மாமன்ற உறுப்பினராக தொடர்ந்து நீடிக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.**

***மேயர் பிரேரிக்கும் தீர்மானம்***

**மதுரை மாநகராட்சி பொறுப்பில் செயல்பட்டு வந்த மின் விநியோகத்தை (Madurai Corporation Electrical undertaking) தமிழ்நாடு மின்வாரியம் 1995ல் ஏற்றுக் கொண்டது. மேற்படி மின் விநியோகத்தை ஏற்கும்போது மாநகராட்சியின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் இழப்பீட்டுத் தொகையை இதுவரை மின்வாரியம் செலுத்தவில்லை. மேற்கண்ட பொருள் சம்பந்தமாக 30.12.2009ல் தேதியன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் பேசிய வடக்கு மண்டல தலைவர் மேற்படி மாநகராட்சி சம்பந்தமான சொத்துக்களுக்குரிய சொத்து மதிப்பினை தற்கால மதிப்பீட்டில் பெறவேண்டும் என்ற கோரிக்கையை மாமன்றம் பரிசீலனை செய்து, மாமன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டு மாநகராட்சி பொறுப்பிலிருந்த மின் விநியோகத்தை தமிழ்நாடு மின்வாரியம் ஏற்றுக்கொண்டதற்கான, மாநகராட்சிக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கு தற்கால மதிப்பீட்டின்படி இழப்பீட்டுத் தொகையினை மின்சார வாரியத்திடமிருந்து பெற்றுத்தர அரசுக்கு அனுப்பி வைக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**(ஒம்..) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை.**
**நாள் : 29.12.2009.**

* * * * * * * *